

திருப்பூர் மாநகராட்சி

மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது.

தெ.மூ.54/[illegible]

அலுவலக உத்திரவில் கண்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையாளர்
திருப்பூர் மாநகராட்சி

நகா ஊரமைப்பு துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்
திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, நெருப்பெரிச்சல் கிராமம், ரீ.ச.எண்: -721/1A1B,722/2B2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவு ஒப்புதலுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்பம் எண்: HI59EWGW	நாள்: 12.12.2023	அளவு : 1:400

<u>குறிப்பு:</u>

மனை உட்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.20 ஏக்கர் (அ) 810.00 ச.மீ
ஒதுக்கப்பட்ட மனைகள் : 2
மனைஉட்பிரிவின் எல்லை
நிலையிலுள்ள சாலை

வ

பொது ஒதுக்கீடு :

I. பூங்கா

i) ஒதுக்கப்பட்ட வேண்டிய பூங்கா பரப்பு : (மனை உட்பிரிவின் பரப்பு) x10%
(810.00 சமீ) x10/100 = 81.0 ச.மீ

ii) பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பு தொகை : 81.0 ச.மீ (10.00%)
(மனுதாரால் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது)

கட்டிட வரம்பு :-

9.0மீ வரை அகல கொண்ட சாலைகளுக்கு 1.50மீ விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 12.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்.

மூலை முடக்கு :-

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ ஒ 1.5மீ விடப்படல் வேண்டும்.
12.0மீ முதல் 30.5மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீ ஒ 4.5மீ விடப்படல் வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ஆயு-1) நாள் 04.02.2019 அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020(ம)-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்-181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அரசாணை எண்-141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி உத்தேச குடியிருப்பு மனைஉட்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழை நீர் வடிகால் வசதி, மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், நெருப்பெரிச்சல் ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ ஒ1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

PLANNING PERMISSION NO : 11 /2024

SWP / DTCP / TIRUPPUR LPA / LAYOUT NO : 11 /2024

பா. ஜெய்ராணி
அளவர் /
உதவி வரைவாளர்

சு.காளிமுத்து
வரைவாளர் நிலை - III

வே. பிரேம் குமார்
கட்டிடக்கலை.
திட்ட உதவியாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்
மாவட்ட நகர் ஊரமைப்பு துறை அலுவலகம் / திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம்
திருப்பூர் மாவட்டம்.

Signature valid
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2024.02.05 15:02:58